கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 28.03.2022 அ.வ.எண். 427/2017 வா.சா.1 நிர்மலாதேவி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவர் சின்னத்துரைக்கு நான்தான் மனைவி என்றும், உரிமைக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் சின்னத்துரைக்கும் திருமணம் நடந்த தேதி தெரியுமா என்றால் 03.12.1976. என்னுடைய திருமண சான்றிதழை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகளின் காதணிவிழா அழைப்பிதழை தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் எப்போது காலமானார் என்றால் 21.03.2014ம் தேதி காலமானார். பிரியா என்பது யார் என்றால் எனது மகள். அபர்ணா என்பது யார் என்றால் எனக்குத் தெரியாது. என்னை தவிர எனது கணவருக்கு வேறு மனைவி உண்டா என்றால் இல்லை. எனது மகள் பிரியாவை இந்த வழக்கில் கட்சி சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. பத்மாவதி என்பது யார் என்றால் என் மாமியார். அவர் இப்போது உயிருடன் உள்ளார். அவரது மகள் வீட்டில் உள்ளார். 3ம்பிரதிவாதி பத்மாவதி, (1ம் பிரதிவாதி) பானுமதி, (2ம் பிரதிவாதி) மற்றும் அபர்ணா ஆகியோர் தான் சின்னதுரையின் வாரிசுகள் என்று வாரிசு சான்று வழங்கியுள்ளார் என்றால் தவறாக வழங்கி விட்டார்கள். அது பொய்யான சான்றிதழ். 3ம்பிரதிவாதி விசாரணை செய்ததின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் அபர்ணா அகியோர் தான் வாரிசுகள் என்று வாரிசு சான்று வழங்கியுள்ளார் என்றால் அது பொய்யானது. அபர்ணாவை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் அவர் யார் என்றே எனக்குத் தெரியாது.

(ஒப்பம்)/- P. சுபாஷினி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொள்ளாச்சி.